# பண்டைய இலக்கியங்களில் காணப்பட்ட போர் மரபுகளில் காட்டப்படும் அறச்சிந்தனை

# Philanthropy during War Found in Old Tamil Literatures

கயல்விழி இளங்கோவன் / kayalvili Ilangovan[1]

Date of submission: 2022-02-11
Date of acceptance: 2022-04-20
Date of Publication: 2022-07-28
Corresponding author's Name:
kayalvili Ilangovan
Email: kayalviliammu@gmail.com

*Tolkappiyam* is one of the oldest books in the Sangam period literature. *Tolkappiyam* has two major divisions, *agam* (internal) and *puram* (external). Except for man's inner moral love, all his other external world morals were called puram (external). Community-related disciplines such as education, valour, gift, friendship, virtue, and rule are all included in the *puram* (exterior). These disciplines are realised by *purananooru* and *patitrupattu* songs. If we look at the *purathinai* (main external), it mentions many war incidents that took place at that time. The wars waged by the *Sangakkala* people also tell of their heroic deeds. Thus, it is remarkable that our people have adhered to philanthropy even in wars. Archaeological evidence suggests that wars were fought under some confinement in ancient times. Wars took place at that time based on certain factors such as the expansion of boundaries, assumption of strength, tendency to grow older, wealth, and conflict within a family. However, there was no evidence in the Confederate news that the war had used unsuccessful or wrong methods. Therefore, this article is based on the morality of our people in the ancient war system, war traditions, war ethics, and the events of the war.

**Key Words:** Confinement, war, philanthropy, traditions, ethics, heroism

## முன்னுரை

'போர்' என்னும் சொல் பொரு அல்லது பொருவுதல் எனும் சொற்களிலிருந்துப் பிறந்தச் சொல்லாகும். அவ்வகையில் போர் என்பது ஒப்புதல் அல்லது ஒத்திருத்தல் எனப் பொருள்படும். நாடுகளுக்கிடையே ஏற்படும் மோதலே போர் என்று களஞ் சியம் கழறுகின்றது. போர் பற்றிய பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைப் பற்றிப் பேசும் தொல்காப்பியர் "போர்" என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சங்ககாலத் தமிழர்களின் போர்மரபுகள் அறப்போர்முறையைச் சார்ந்தவை. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள போரியல் பதிவுகள் யாவும், பண்டையத்தமிழர் நிலத்தில் நிகழ்ந்த உண்மை வரலாற்றுக்கு முக்கிய சான்றாக அமைகின்றது. பண்டையப் போர் முறைகளில் வஞ்சகம், சூழ்ச்சி, கெடுதல் போன்றத் தீய எண்ணங்களைக் கண்டறிவது முயல்கொம்புப் போன்றது. நேர்மையை முழு மூச்சாகக் கடைப்பிடித்தத் தமிழர்கள் போர் முறைகளிலும் கூட அவற்றை அமல்படுத்தினர். சில வரலாற்றாசிரியர்களின் கூற்றின்படி, மன்னர்கள் அல்லது மறவர்கள், நாட்டின் பாதுகாப்பிற்கும் நாட்டின் வளத்தையும் மேன்மையும் கட்டிக் காப்பாற்றிடப் போர் முறைகளைக் கையாண்டனர்.

தொடர்ந்து, பிறர்நாட்டு ஆக்கிரமிப்பு, புகழ் எய்துதல், ஆதிக்க விரிவாக்கம் ஆகிய பல காரணங்களின் அடிப்படையிலும் பண்டையத் தமிழ் மன்னர்கள் இடைவிடாது போர் புரிந்தனர் என்று வரலாறு

[1] The Author is a Student in Sultan Idris Education University. kayalviliammu@gmail.com

கூறுகின்றது. இவைகளெல்லாம் தவிர்த்துப், பண்டையக் காலங்களில் போர்முறையை அறத்துடன் கடைப்பிடித்த மன்னர்கள், போர் நெறிமுறைகளையும் தவறாமல் கடைபிடித்தனர் என்பதும் நாம் அறிந்ததே. ஏனெனில், பண்டைய காலத்தில் மன்னர்கள் போர்க்குச் செல்லும் முன், போரிடும் முறைக்கு ஏற்ப வெவ்வேறு பூக்களை அணிந்து சென்று போரிடுவர்; கோட்டைப் போரில் ஈடுபடுவோர் உழிஞைப்பூ சூடிக்கொள்வர் என இதுபோன்று பல விடயங்களை இக்கூற்றுக்கு அடையாளப்படுத்திடலாம். ஆகவே, சங்ககால வரலாறுகளில் இடம்பெற்றத் தமிழ்நில மன்னர்கள் மற்றும் வேந்தர்களின் வியக்கத்தகுந்தப் போரியல் ஆற்றல்களையும், அதில் அவர்கள் கடைபிடித்த அறம், போர்நெறிமுறைகளைப் பற்றியும், படைகளையும் படைக்கலன்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து விளக்குவதற்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## முந்தைய ஆய்வுகள்

பண்டைய இலக்கியங்களில் காணப்பட்டப் போர் மரபுகளில் காட்டப்படும் அறச்சிந்தனைக்குறித்து நிறைய ஆய்விதழ்கள், கட்டுரைகள், நூல்கள் வரையப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியத்தில் நிகழ்ந்தப் போர் மரபுகளையும் அதில் கடைபிடித்த அறத்தையும் இன்றைய சாமானிய மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்கும் வகையில் பல முயற்சிகள் பல எழுத்தாளர்களராலும், கட்டுரை ஆசிரியர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. அவர்களின் அம்முயற்சியே இன்றைய இவ்வாய்வுக்கு நல்லதொரு ஊக்கமாகவும், முக்கிய சான்றாகவும் அமைகிறது. அந்தவகையில், முனைவர். *ஹெப்சி ரோஸ் மேரி.அ* கைவண்ணத்தில் வெளியான ஆய்வுக்கட்டுரை ஒன்றில் *“புறநானூறு காட்டும் போர் நிர்வாகமும் மேலாண்மையும்”* குறித்து எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் போரினால் விளையும் துன்பங்களை எடுத்துக்கூறி போர்களைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளையும் கட்டாயமாகப் போர்செய்ய வேண்டிய சூழல்களில் பொது மக்களுக்குத் துன்பம் ஏற்படாதவாறு அவர்களைப் பாதுகாத்தச் சங்ககால மக்களின் நிர்வாகத் திறனையும் பற்றி குறிப்பிடுகிறார். தொடர்ந்து, *“சங்ககாலப் போர்முறைகளில் படைகளும் படைக்கலன்களும்”* என்ற கட்டுரையின் மூலம் ஆய்வாளர் மு.செல்லமுத்து, சங்ககால அரசுருவாக்கச் சூழலில் போருக்குப் பெரிதும் பயன்படும் பல்வேறு படைகள் படைக்கலன்கள் பற்றிய விளக்கங்களையும் போரில் அவை பெற்ற முக்கியத்துவம் குறித்த புரிதல்களையும் எடுத்துரைப்பதோடுப் போரறக் கோட்பாடும் போரியல் அணுகுமுறை எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகிறார்.

இதையடுத்துப், *புலவர் கா. கோவிந்தன் எம், ஏ* உடைய *“பண்டையத் தமிழர் போர் நெறி”* என்னும் நூல் பற்றி எடுத்துரைக்கலாம். இந்நூலின் மூலம் அக்காலத் தமிழகத்தின் நிலையை அகத்துட் கொண்டு ஊன்றி நோக்குவார்க்கு ஆசிரியர் கூறுவன எல்லாம் நின்று தாக்கிய ஆக்கப் போர்களே அல்லது சென்று தாக்கிய அழிவுப் போர்கள் அன்று என்பது தெற்றெனப் புலனாகும். இக்கருத்தை ஆராய்ந்து நிலைநாட்டுவதோடு அந்நான்குப் போர்களின் ஒவ்வொரு நிலையினையும் விளக்கும் துறைகளின் அமைதியினை அத்திணைகளோடு பொருந்திக் காண்பிட்டுள்ளார். தொடர்ந்து, *புறநானூற்றுப் போர் நெறிகள் - அறங்கள்* அண்டை நாடுகளின் இன்றைய போர்க்குற்றங்கள் எனும் தமிழ் இதழில் டாக்டர் ஜானகிராமன் எழுதியவைப்பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். அவ்வகையில் இக்கட்டுரையின் வாயிலாக டாக்டர். ஜானகிராமன் போர்நெறிகள், அறங்கள், போர்க்குற்றங்கள் “sins of war ”, திரிய போர் மறம் “unethicsofwar”, மறத்திலும் அறம் என பல விடயங்களை அடையாளப்படுத்தியுள்ளார்.

இவ்வரிசையில் பேராசிரியர் முனைவர் மு. இராசேந்திரன், க.சில்லாழி வரைந்தச் *சங்கத்தமிழரின் மானம் காத்த வீரம்* எனும் ஆய்வு கட்டுரை, இந்த ஆய்வுக்கு முக்கியச் சான்றாக அமைந்திடுகின்றது. இந்த ஆய்வு கட்டுரையின் வழி வீரத்தை முன்னிறுத்தி போர்கள் நிகழ்கின்றது என்பதனையும்

பண்டையக் காலம் போர்கள் யாவும் தமிழரின் மனம் காக்கும் வகையில் அமையச் செய்தது வீரம் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்விற்கு வலுச்சேர்க்கும் இதுபோன்ற நிறைய ஆய்வு கட்டுரைகளும், நூல்களும், தொல்லியல் மற்றும் அகழாய்வுச் சான்றுகளும், தேசியக் கருத்தரங்கும், பன்னாட்டு கருத்தரங்கும், முனைவர் பட்ட ஆய்வேடுகளும், இணையதளம் மற்றும் இதழியல், ஊடகம் வழி திரட்டிடக்கூடிய தரவுளுகளையும் இன்னபிற ஆவணங்களும் துணைமை ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு தொடர்பான தரவுகளைத் திரட்ட சங்க இலக்கியம் நூலான தொல்காப்பியம் பெரும் உறுதுணையாக இருந்தது. பதிற்றுப்பத்து, புறத்திணைப் போன்றவைகளிலிருந்து கிடைக்கப்பெற்றத் தகவல்களை மையமாகக் கொண்டும், அதிலும் குறிப்பாகப் பண்டைய குறுநில மன்னர்கள், வேந்தர்களின் பதிவுகளை ஆய்வுக்கு உட்படுத்துவதால் இவ்வாய்வு வரலாற்றுமுறைத் திறனாய்வு ஆகிறது. அதுமட்டுமின்றி, சங்க கால இலக்கியங்களில் அரசர்களின் போர்மரபு பற்றியும், அதில் அவர்கள் கடைபிடித்த அறச்சிந்தனை, படை வகைகளையும், படைக்கலன்களையும் குறித்து விளக்குவதால் போரியல்முறைத் திறனாய்வும் இவ்வாய்வு அணுகுமுறைகளாக அமைகின்றன.

## ஆய்வு கண்டுபிடிப்பு

### பண்டைய போர் மரபுகள்

சங்க காலத்தில் நடைபெற்றப் போர்கள் அனைத்தும் சில வரையறைகள் அடிப்படையில் மேற்கொண்டவையாகும். அதிலும் குறிப்பாகப், போருக்குச் செல்லும் முன் குறிப்பிட்டப் பூக்களைச் சூடுவது முக்கிய மரபாக அச்சமயங்களில் இருந்துள்ளது. இந்த மரபை ஒவ்வொரு வேந்தர்களும், மன்னர்களுமே கடைபிடித்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு மன்னனும் பூக்களைச் சூடி போரிடும் மரபைக் கொண்டிருந்தனர். வீரர்கள் பூச்சூடுவதை வைத்தே எதற்காகப் போர் நிகழ்கிறது என்பதை உணரந்திடலாம் என சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

அதுமட்டுமின்றி, அன்றைய சூழலில், போர்க்களத்தில் தன்னுடன் போரிடுபவன் தன்னுடைய படையைச் சார்ந்தவனா அல்லது தம்முடைய எதிராளியா என எளிதாக அடையாளங்கண்டிடப் பூக்களை அணிவதை வழக்கத்தில் வைத்திருந்தனர். அவ்வகையில் ஆநிரை கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், ஆநிரையை மீட்கப் போவோர் கரந்தைப் பூவையும், பகைவர் நாட்டின் மீது படை எடுப்போர் வஞ்சிப் பூவையும், அரணைக் காப்போர் நொச்சிப் பூவையும், அரணத்தை முற்றுகை இடுவோர் உழிஞைப் பூவையும், ஒரு களத்தில் புக்குப் போரிடுவோர் இரு திறத்தாரும் தும்பைப் பூவையும் , போரில் வெற்றி எய்தியோர் வாகைப் பூவையும் சூடுவர். போக்களத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு கோபத்தின் காரணமாக வெம்மை தோன்றும். அதனைத் தணிப்பதற்காகவும் கூட மன்னர்களும், மறவர்களும் பூச்சூடியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆகையால், போருக்குச் செல்லும் முன் வீரர்களுக்குப் பூச்சுட வருமாறு அழைப்பு விடுப்பர் என சங்க காலப் பாடலான புறப்பாடலில் கழாத்தலையார் அடையாளங்காட்டியுள்ளார்.

*“மூதிலாள ருள்ளும் காதலின்*

*தனக்கு முகந் தேந்திய பசுயென் மண்டை*

*இவற்கீ கென்னு மதுவுமன் றிசினே*

*கேட்டியோ வாழி பாண பாசறைப்*

*பூக்கோ ளின்றென் றையும்*

*மழவாய் தண்ணுமை யழிசினன் குரலே”*

*(புறம். பா. 289: 510)*

இதைத்தொடர்ந்து, மறவர்க்கு ஊன்சோறு தருவதும் வழக்கத்தில் இருந்துள்ளது. ஏனெனில், அரசன், மறவர் என இருவருக்குமே ஒரே வகையான சோற்றை உணவளிக்கும் மரபு இருந்துள்ளது. இதனைக் குறித்து (பக். 155, பதிற்றுப்பத்து, புலியூர்கேசிகன் உரை) இடம்பெற்றுள்ளதைக் காணலாம். தொடர்ந்து, பழங்கால தமிழர்கள், போரில்

விழுப்புண்ணோடு இறப்பதே பெருமையென எண்ணினர். அவ்வகையில் ஒரு குழந்தை இறப்பினும், அக்குழந்தையின் நெஞ்சில் வாளால் கீறி புதைக்கும் மரபைக் கடைபிடித்தனர் அன்றையத் தமிழர்கள். தொடர்ச்சியாக, பழங்காலத் தமிழர்கள் 'நடுகல்' நட்டு வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதைக் குறிப்பிடும் வகையில், "காட்சி, கால்கோள், நீர்படை, நடுகல்" போன்ற சொற்கள் (தொல். பொருள் நூ. 63) இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியங்களில் நடுகல் வடிவில் அமைந்த கல்வெட்டுக்களைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுகின்றன. போர்க்களத்தில் மாண்ட வீரனின் பெயரும், பெருமையும் நடுகல்லில் எழுதும் வழக்காறு பற்றி தொல்காப்பியம் (புறத்திணை 5) புறநானூறு (பாடல்கள் 221, 223, 232, 260, 261, 263, 264, 265, 282, 287, 314, 328, 329, 335) அகநானூறு (131) மலைபடுகடாம் (வரி 386 - 389) பட்டினப்பாலை (வரி : 78 - 79) புறப்பொருள் வெண்பாமாலை (பொதுவியல் - 8) ஆகிய நூல்கள் காட்டுகின்றன" (பக். - 10, தமிழக வரலாறும் பண்பாடும்). அவற்றுள் பெரும்பகுதியானவைக் குறிஞ்சிப் பாடல் என்பது குறிப்பிடத்தக்கது.

### i. போர் நடவடிக்கைகள்

தொல்காப்பியம் தவிர்த்து சிலப்பதிகாரம் போன்ற பிற்கால இலக்கியங்களை ஆராய்ந்து பார்க்கையில், போரைத் தொடங்க தீர்மானித்துப் பின்னரே படைக்கான போர்வீரர்களைத் திரட்டுவதற்குத் தூதுவர்களை அனுப்புவது வழக்கமாக இருந்துள்ளது என்பதனை அறிந்திட முடிகின்றது. பொதுவாக, தமிழர்களின் மரபுபடி எந்த ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்ல நேரம் அதாவது, நனிநிமித்தம் பார்ப்பது ஒரு வழக்கமாக இருந்துள்ளது. அதேபோல், மன்னர்களும் படைகளைப் போருக்கு முன்செலுத்துவதற்கு முன் நல்ல நேரம் பார்ப்பர் என குறிப்புகள் சில அடையாளங்காட்டிடுகின்றன. போருக்குச் செல்லும் முன் நல்ல நாள் குறித்து, போருக்கு ஏந்திச்செல்லும் வாளைப், புனித நீராட்டி குடை முரசுடன் அணிவகுப்பும் நடத்தியுள்ளனர். இதனை நாட்கோள் எனக் குறிப்பிடுவர். இதன் தொடர்ச்சியாகக், போருக்குச் செல்லும் முன் போர்க் கடவுளான கொற்றவையை வணங்கி முரசு ஒலித்து போருக்குச் செல்வர். மறவர், எயினர், மழவர் போன்றவர்களும் போரில் சேர்ந்தனர்.

### ii. படைகளும் படைக்கலன்களும்

மன்னன் வழித்தே மலர்தலை உலகம் என்ற அற்றை மொழிக்கு ஏற்ப மன்னர்தம் வழித்ததாக அன்றைய பழந்தமிழர்கள் செயல்பட்டனர். தொல்காப்பியர் காலம்தொடங்கி தமிழர்கள் மூன்று போர்க்கருவிகளை முதன்மையானதாகக் கையாண்டு வந்துள்ளனர். அவை வாள், வில், வேல் என்பனவாகும். தொல்காப்பியத்திலும் பண்டைத்தமிழர் போர்க்கருவிகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றின் மூலம் படைக்கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்வதோடு, அவற்றின் வளர்ச்சியையும் தெரிந்து கொள்ளமுடிகின்றது. தொடர்ந்து தொல்காப்பியத்தைத் தவிர்த்து , கம்பராமாயணம், வில்லி பாரதம் ஆகியவற்றில் படைக்கருவிகள் திட்டமிடப்பட்ட அளவில் தேர்ந்த அமைப்பு முறையில் கையாளப்பட்டுள்ளன என்பது தெளுவாகின்றது.

வில்லும், வேலும் பகைவரைத் தூரத்தில் இருந்து தாக்கப் பயன்பட்டுள்ளது. இம்முப்போர்க்கருவிகள் பற்றியப் பல குறிப்புகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், அவற்றை தொடர்ந்த இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.இம்முதன்மைக் கருவிகள் தவிர வேறு சில கருவிகளும் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை அடார், அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளிகடிகருவி, குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை எஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில் மற்றும் வேலுறை ஆகும். இவ்வகைக் கருவிகளைத் தமிழர்கள் பண்டையக்

காலங்களில் பயன்படுத்தியதாகப் புறநானூற்றின் முன்னுரையில் உ,வே, சாமிநாதையர் குறிப்பிடுகின்றார். பண்டையக் காலத்தில் படைகளை வகுத்து அவற்றைக் காத்துப் பயிற்றுவித்து, அமர் நடத்திய முறை அறிதற்குரியது. படையும் கொடியும் குடையும் முரசும், நடைநவில் புரவியும் களிறும் தேரும், தாரும் முடியும் நேர்வன பிறவும் தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரியத் (தொல்காப்பியம், பொருளதிகாரம் 616) என்ற நூற்பாவின்வழி மன்னர்க்குரியப் புறவடையாளங்கள் பெறப்படுகின்றன.

### போர் அறம்

ஓர் அரசனுடையக் கடமையானது நாட்டு மக்களைப் பாதுகாத்தல் ஆகும். அதிலும் குறிப்பாக, போர் காலங்களில் உயிர்களைப் போற்றிப் பாதுகாப்பதும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் ஒரு வேந்தனின் முக்கிய பாங்காகும். இதனை,

*"அம் அம்பு கடி விடுதும் நும் அரண் சேர்மின்" (புறம் 9)*

அதாவது அரசன் மக்களிடத்தில் கூறுகையில் " நாங்கள் அம்புகளைச் செலுத்திப்போர் செய்ய உள்ளோம்; மக்களாகிய நீங்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்தைச் சென்று அடையுங்கள்" என கூறிடும் அறநெறி அல்லது முன்னெச்சரிக்கை எனலாம். ஆக, இவ்வாறான நல்ல எண்ணங்கொண்டு மக்களை சீரும் சிறப்புமாக வழி நடுத்திச் செல்லும் மன்னனின் பாங்கினை இவ்வரிக் குறிப்பிடுகிறது.

### மானம் காத்தல்

இதைத்தவிர்த்து, மன்னர்கள், வீரர்கள் என அனைவரும் தன்மானத்துடன் வாழ்ந்தனர். எத்தகைய சூழலிலும் தன்னிலையில் தாழாமையும் தாழின் உயிர் வாழாமையும் மானமென்பது தமிழர் கோட்பாடாகும். ஏனெனில், ஓர் அரசனுக்கு மானத்தைக் காட்டிலும் சிறந்த அறம், பொருள், இன்பம் இல்லை. இரப்பதை விட இறப்பதே மேல் எனும் கொள்கையைக் கொண்டவர்களாகத் திகழ்த்தனர் பழந்தமிழர்கள் . இதனை,

*"தாம் இரந்து உண்ணும் அளவை*
*ஈன்மரோ இவ்வுலகத்தானே?" (புறம் 74)*

அதாவது, அரசர்கள் தோல்வியுற்றுப் பகைவர்பால் துன்பமுற்று வாழ்வதையும், போர்க்களத்தில் புறப்புண் ஏற்படுவதையும், தண்ணீராக இருந்தாலும் கூட அதைப் பகைவரிடமிருந்து இரந்து பெறுதலையும் தம் மானத்திற்குப் பெரும் இழுக்காகக் கருதினர். இதற்குச் சேரமான் கணைக்காலிரும்பொறையை முக்கிய உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம். கணைக்காலிரும்பொறைச் சோழன் செங்கானோடு போர் செய்துத் தோல்வியைத் தழுவிச் சிறை வாசம் பெறுகிறான். தனக்கு ஏற்பட்ட நீர் வேட்கை மிகுதியால் சிறைக் காவலரை நீர் தரும்படி வேண்டுகிறான். அவர்கள் முதலில் தராமல் பின்பு காலந்தாழ்த்தி தரும் சூழலில், அந்த அவமானத்தை ஏற்க முடியாத கணைக்காலிம்பொறை ,அந்நீரை ஏற்க மறுத்து உயிர் விடுகிறார். அறம் பொருந்திய வாழ்க்கை முறையில் இதுவும் ஒன்று.

### i. பிறர் நாட்டைக் கைப்பற்றாமை

பிறர் நாட்டைக் கைப்பற்றி ஆள்வது ஒருகாலத்திலும் தமிழர்களின் குறிக்கோளாகவோ இலட்சியமாகவோ இருந்ததில்லை என்பது தமிழர்களிடையே கடைபிடிக்கப்பட்டு வந்த நல்லதொரு நெறி ஆகும். ஒரு நாட்டைக் கைப்பற்றிக் காலனி ஆக்குவதற்குப் பெரிய நிலைப்பாடு அவசியம். ஆனால் அன்றைய மன்னர்களிடத்தில் அந்நிலைப்பாடு இருப்பினும் காலனி யாதிக்கத்தில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

### ii. போர்க்களத்தில் மனிதநேயம்

போரில் புறமுதுகினைக் காட்டி ஓடுபவனையும், நடுங்கி அஞ்சுபவனையும் எந்த ஒரு தாக்குதலுக்கும் உட்படுத்தாமல் விட்டுவிடுவது நன்று; அதுவே மனிதாபிமானம். அதை விடுத்தது அவனைத் தாக்கி அல்லது வீழ்த்தி வரும் வெற்றி சிறப்பானவை அல்ல. இதையே சங்க இலக்கியங்களும்

தெளிவுப்படுத்துகின்றன. இதற்குச் சேரலகனை உதாணரமாகக் காட்டிடலாம். பாண்டவர்க்கும், நூற்றுவர்க்கும் இடையே போர் நடக்கிறது அப்போரில் துரியோதனாதிகள் வீழ்த்துப்பட்டு மாய்ந்துபோகின்றனர். அப்போர்களத்தில் மாயந்துவிட்ட தலைவனுடைய எஞ்சிய படைவீரர்கட்கும் தருமன் முதலாகிய ஐவரின் படைவீரர்கட்கும் சேரலகன் அண்ணமிட்டு கைப்பற்றியதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்விடத்தில் தம் வெற்றியைக் கொண்டாடாமல் தோல்வியைத் தழுவியவர்களை உதாசீனப்படுத்தாமல் அவர்களுக்கு உணவளித்து உயிர் பிழைக்கச் செய்த மாண்பு மனித நேயத்தின் அடையாளமல்லவா? ஆகவே, மனிதநேயம் போர்முறை என்பது முக்கியமானது.

### iii. மறத்திலும் அறம்

மன்னர்கள், வீரர்கள் பகைவர் நாட்டில் போருக்குச் செல்லும் முன் அவ்விடம் இருக்கும் மக்களின் பாதுகாப்பை முன்னிறுத்தி, அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு செய்வர். ஏனெனில், மன்னனின் நோக்கம், பகைவரைத் தாக்குவதே, அப்பாவி மக்களை அன்று. ஆகவே, போர் தொடங்குவதற்கு முன், போர்ச் செய்தியினை முரசறைந்து தெரிவிப்பது மரபாகும். அதேசமயங்களில் போரில் பங்குக் கொள்ளாதவர்கள் பாதுகாப்பிற்காக எச்சரிக்கை விடுபடுவதும் உண்டு. இதுபோல் எச்சரிக்கைக் குறித்து புறநானூற்று பாடல் எடுத்துரைக்கிறது:

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின் என

அறத்தாறு நுவலும் பூட்கை” (புறம்.9:16)

போரில் அப்பாவி மக்களின் உயிர் பிரிந்திடக் கூடாது என்பதற்காக அம்மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர செய்தப் பண்பு பண்டையத் தமிழர்களின் அற உணர்வை புலப்படுத்துகின்றது.

### iv. களம் நிறுவிப் போர்

வாகைப்பறந்தலை, வெண்ணிப்பறந்தலை, தலையாலங்கானம் போன்ற இலக்கியச் சான்றுகளின் வழி களரும் மணலும் பரந்த வெளிகளான பறந்தலை எனப்படும் இடங்களையே அன்றைய மன்னர்கள் போர்க்களமாக அமைத்துக்கொண்டனர் என்பதை அறியமுடிகின்றது. பொதுவாகப், போர் புரியும் மன்னர்கள் தமக்குச் சாதகமான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது புத்திசாலித்தனமாகவும் சிறந்த முன்னேற்பாடுகளாக இருந்தாலும் கூட போர் மரபின்படி சரி அன்று. ஏனெனில், பகைவரை மறைந்திருந்து தாக்குதல், எதிர்பாராமல் தாக்குதல் ஆகிய மடைமையின்றி களம் ஒன்றை நியமித்தே போர் செய்வதை அன்றைய மன்னர்கள் ,மறவர்கள் யாவரும் விரும்பவில்லை. பகைவனுக்குச் சாதகமான போர்க்களத்தில் அவனை வீழ்த்தி போரில்வென்று வாகைச் சுடுவதே உண்மையான மற்றும் நியாயமான வெற்றியாகும். இதைத்தான் பண்டையக் காலத்தில் மன்னர்கள் யாவரும் பின்பற்றினர். களம் நிறுவி போரிடும் வினையால் போரில் பங்குக் கொள்பவர்களுக்கு மட்டுமே பாதிப்புத் தவிர அப்பாவி மக்களுக்கோ அல்லது போரிலிருந்து விலகியவர்களுக்கோ அல்ல. அந்தவகையில் சுற்றத்தாரின் நலம் காக்கப்பட்டுக் களம் நிறுவி நடக்கும் போரானது அறம் சார்ந்து அமைகின்றது.

### V. பகலில் மட்டுமே நிகழும் போர்

“வெம்போர்ச் செழியனும் வந்தனன் எதிர்ந்த

வம்ப மள்ளரோ பலரே

எஞ்சுவர் கொல்லோ, பகல்தவச் சிறிதே?” (புறம். 79)

என்ற புறநானூற்றுப் பாடலில் பகலில் மட்டுமே போர்கள் நிகழ்வதாகக் குறிப்புகள் உள்ளன. பகல் வேளையில் மட்டுமே பகைவர்களைச் சரியென அடையாளங்கண்டிட முடியும் என்பதே

இதற்கு முக்கிய காரணியாகயாகும். பகல் முழுதும் போரில் ஈடுபடுவதால் சூரியன் மறைந்த இரவுப்பொழுதில், ஓய்விற்காக போர் செய்வதை முற்றிலும் தவிர்த்தனர். அதேவேளையில், இரவுப்பொழுதில் பாசறையில் தங்கியிருக்கும் காயமுற்ற வீரர்களுக்கு ஆறுதல் சொல்லும் அரசனின் செயல் (நெடுநல்வாடை) அறமாகக் கருதப்படுகின்றது. அரசனின் இச்செயலை ஆராயும் பொழுது பகலில் போரிடுவதும், இரவில் போர் நிறுத்தப்படுவதும் போரின் அறச்செயலாகவே உணரமுடிகின்றது. பகைக் கொண்ட அரசனிடத்தும் அவனைச் சார்ந்து போர் செய்யும் வீரர்களிடத்தும் சினத்தைக் காட்டும் மன்னன் தன் வீரர்களிடம் அன்பு காட்டுவது மறத்திடையே தோன்றிய அறமாகும்.

**முடிவுரை**

போர் என்பது வீரத்தை அதாவது மறத்தைக் குறிக்கும். அந்நிலையில், அங்கே அறம் எப்படி நிலைபெறும் என்ற வினாக்கள் நமக்கு எழலாம். இதற்கு விடையாக கொடிய போர்க்களத்திலும் அறச்செயல்கள் பல நிகழ்ந்துள்ளன எனச் சான்றுப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. மன்னர்கள் மற்றும் மறவர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் போராக சங்ககாலப் போர் இருந்தாலும் அவற்றிலும் அறம் பின்பற்றப்பட்டு அறப்போராகவே திகழ்ந்துள்ளன என்றால் அது மிகையாகாது. போரினால் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பாக, அவலங்களை அக்கால மன்னர்கள் உணர்ந்திருந்தனர். கல்லுக்குள் ஈரம் என்பது போல் தமிழ் மன்னர்கள் வீரம் மிக்கவர்களாக இருந்தாலும் அவர்கள் இரக்கம் உடையவர்களாக விளங்கினர் என்பதை அவர்கள் செய்த போரின் போது பின்பற்றிய நெறிமுறைகளை வைத்து நாம் அறிந்து கொள்ளலாம்.

## References

Prabu. Pa. Pandaya Por Muraigalum Marabugalum. (19 December 2021), https://www.keetru.com/index.php

Kiriban. Sangalaka Por Muraigalum Vithigalum. (21 October 2014), https://yarl.com/forum3/topic/147605

Annabakyam, V. Maraporilum Aram. (22 June 2021). https://www.vallamai.com/?p=102847

Thurai Kumar. “Sanga Ilakiyam Kurum Arasiyal Thathuvam” Journal of Sanlax. (Vol II, Issue 2, pp. 66-69). http://www.shanlaxjournals.in/pdf/TS/V3N2/ts_v3_n2_i2_012.pdf

Hepcy Rose Mary. (2017). “Purananuru Kaaddum Poor Nirvagamum Melanmayum” https://www.vallamai.com/?p=81993

Janakiraman. “Purananutru Poor Nerigal, Arangal, Andai Nadukalil Indraya Porkutrangal” (23 September 2020), https://thetamiljournal.com

Durai Manikandan. “Purananutril Manitha Neya Kolgaikal” (19 March 2010). https://old.thinnai.com/?p=61003192

Sathasivam, Su. Tamilargalin Poorkaruvigal. (4 May 2019), http://siragu.com